செய்தி வெளியீடு எண்:809 நாள்:29.09.2021

செய்தி வெளியீடு

**பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதியிலுள்ள 3 குழந்தைகள் மையங்களை தலைமைச் செயலாளர் முனைவர் வெ.இறையன்பு, இ.ஆ.ப., அவர்கள் இன்று (29.9.2021) திடீர் ஆய்வு**

ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் பெருநகர சென்னை மாநகராட்சி, மைலாப்பூரில் திட்டம் 3 மற்றும் திட்டம் 11ல் செயல்படும் துவாரகா நகர், மெக்காபுரம், மற்றும் மைலாப்பூர் பஜார் சாலை ஆகிய இடங்களில் உள்ள மூன்று குழந்தைகள் மையங்களில் தலைமைச் செயலாளர் முனைவர் வெ. இறையன்பு, இ.ஆ.ப., அவர்கள் இன்று (29.09.2021) பார்வையிட்டு திடீர் ஆய்வு மேற்கொண்டார்

இன்றைய ஆய்வின்போது தலைமைச் செயலாளர் அவர்கள், குழந்தைகள் மையங்களில் வழங்கப்படும் முட்டையுடன் கூடிய சூடான மதிய உணவு குழந்தைகளுக்கு வழங்கப்படுவதை பார்வையிட்டார். மேலும், இன்று குழந்தைகளுக்கு வழங்கப்பட்ட காய்கறி புலாவ் சாதத்தினை உண்டு தரத்தினை சரிபார்த்தார். குழந்தைகளுடன் உரையாடி, மையத்தில் வழங்கப்படும் முன்பருவக் கல்வி குறித்தும் கேட்டறிந்தார். குழந்தைகளின் ஊட்டச்சத்து நிலை, தன் சுத்தம் ஆகியவற்றுடன் குழந்தைகள் மையங்களின் உட்கட்டமைப்பு வசதிகளையும் பார்வையிட்டு ஆய்வு செய்தார். குழந்தைகள் மையத்தின் உணவுப் பொருள் இருப்பு அறை, சமையலறை மற்றும் பொருட்களின் பராமரிப்பு குறித்தும் ஆய்வு மேற்கொண்டார்.

சென்னை மாவட்டத்தில் 1806 குழந்தைகள் மையங்கள் செயல்படுகின்றன. இவற்றின் மூலம் 87,322 குழந்தைகள், 13,466 கர்ப்பிணிப்பெண்கள் மற்றும் 10,388 பாலூட்டும் தாய்மார்கள் என மொத்தம் 1,11,176 பயனாளிகள் பயன்பெற்று வருகின்றனர்.

01.09.2021 முதல் குழந்தைகளுக்கு உணவு வழங்கும் பணி நடைபெற்று வருகிறது. இம்மையங்களில், கொரோனா பெருந்தொற்றினை தவிர்த்திடும் வகையில் நிலையான வழிகாட்டு நெறிமுறைகளை மையங்களில் கடைபிடிக்கவும், குழந்தைகளின் பெற்றோருக்கு தெரிவிக்கவும் அறிவுறுத்தினார்.

குழந்தைகளை அன்புடனும், பாதுகாப்பாகவும் பராமரிக்க வேண்டும் என குழந்தைகள் மையப் பணியாளர்களுக்கு அறிவுறுத்தினார்.

உடன் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை முதன்மைச் செயலாளர் திரு. ஷம்பு கல்லோலிகர், இ.ஆ.ப, பொதுத்துறை செயலாளர் முனைவர் டி. ஜகந்நாதன். இ.ஆ.ப, ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சிப் பணிகள் இயக்குநர் மற்றும் குழும இயக்குநர், திருமதி. வே.அமுதவல்லி. இ.ஆ.ப,. ஆகியோர் உடன் இருந்தனர்.

*********

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை - 9